III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT

POONAMALLEE

O.S.229/2022

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Selvi. U.Dharani, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 03 -02-2025

| | | | |
|---|---|---|---|
| Name | : E.Jeevanantham | Village | : |
| Father's Name | : Ellappan | Calling | : |
| Age | : | Taluk | : |

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் வாதி. நான் சொல்லக் கூடிய சங்கதிகளை சத்திய பிரமாணம் செய்து எழுத்து பூர்வமாக தாக்கல் செய்கிறேன். அதை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். மேலும் எனது தரப்பில் 3 ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். 15.10.2017 அன்று பிரதிவாதி எனக்கு எழுதி கொடுத்த கடனுறுதி சீட்டு. (அது வா.த.சா. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). பணத்தை திரும்ப கேட்டு நான் எனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்டபூர்வ அறிவிப்பின் அலுவலக நகல். (அது வா.த.சா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது). அதை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை.(அது வா.த.சா. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது). எனவே நான் இந்த வழக்கில் கேட்டுள்ளபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).